Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No.MC. No. 8 /2024
DEPOSITION OF RESPONDENT SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | கனேஷ்பாபு | Calling: | இளநிலை பொறியாளர் |
| Father's Name: | ஆறுமுகம் | Religion: | |
| Village: | திருச்சி | Age: | 58 |
| Taluk: | திருச்சி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.02.2026 நேரம் : 05.30 PM

எ.ம.சா.1 மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரர் எனது சட்டப்படியான மனைவி என்றால் சரிதான். எந்த தேதியில் இருந்து பிரிந்துள்ளோம் என்றால் ஏப்ரல் மாதம் 2016 வருடத்தில் இருந்து பிரிந்துள்ளோம். திருமணம் ஆகி எத்தனை நாட்கள் எங்கள் வீட்டில் இருந்தோம் என்றால் 2006 முதல் 2016 ம் வருடம் வரை. நான் அவர்களை ஒரு நாள் கூட மனுதாரரை வெளியில் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். அந்த 10 ஆண்டு கால வாழ்க்கையில் 1 கிராம்நகைக்கூட என் மனைவிக்கு வாங்கி தரவில்லை என்றால் சரிதான். ஒரு நாள் கூட நான் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதில்லை என்றால் சரியல்ல. எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் காது வலி ஏற்பட்ட நிலையில் அதற்கு அறுவை சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். ஆனால் மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் காதில் செய்துக்கொண்ட அறுவை சிகிச்சைக்கு கூட என்னை அழைத்து செல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். அதை மறுத்து நான் எதிர்மனு உரையில் எதுவும் பதில் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை .திருச்சி கார்பரேசனில் எத்தனை வருடமாக வேலை செய்கிறேன் என்றால் 1994 இல் இருந்து வேலை செய்கிறேன். எனக்கு NET Salary க்கும் Gross Salary க்கும்

வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய Gross Salary எவ்வளவு என்றால் 76,000. NET Salary 56,000. என்னுடைய சம்பள பட்டியலை நான் இன்றைய தேதி வரை எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை தாக்கல் செய்தால் தான் நான் சொல்லும் விவரம் உண்மையா பொய்யா என்று தெரியவரும் என்றால் சரிதான். அதை நான் அடுத்த வாய்தாவில் கொண்டு வந்து தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். என் சகோதரரின் பெயர் பாலமுருகன். நான் குடியிருக்கும் வீடு எனது பெயரிலும் என் சகோதரன் பெயரிலும் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் மதிப்பு 10 கோடி போகுமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் இளநிலை பொறியாளராக பணிபுரிகிற அதே கார்பரேசனில் உள்ள சொத்தின் மதிப்பு எனக்கு தெரியும் என்றால் தெரியாது. 2016 முதல் இன்று வரை ஜீவனாம்சமாக தொகை ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. கணவர் என்பவர் ஒரு மனைவிக்கு ஜீவனாம்ச தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான், என்னுடன் என் மனைவி சேர்ந்து வாழவில்லை என்பதால் நான் கொடுக்கவில்லை. 2016 முதல் இன்றைய தேதிவரையில் என்னுடன் வாழ வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. என் அம்மா வீராம்மாள் ைஹபர் தைராய்டு நோயால் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். மேலும் நீரிழிவு நோயாலும், உயர் இரத்த அழுத்த நோயாலும் கடந்த 20 ஆண்டுகளாக மேற்படி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி என் அம்மாவை பார்த்துக்கொள்ள ஒரு பணியாளராக மனுதாரரை திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் இல்லை. என் அம்மாவை பார்த்துக்கொள்வார் என்றும் அவரை திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் கணவன் மனைவியாக எத்தனை நாட்கள் வாழ்ந்தோம் என்றால் திருமணம் ஆன முதல் நாளே வாணியம்பாடியில் ஒரு நபரை காதலித்து வந்ததாகவும், அவரது பெற்றோர் அவரை திருமணம் செய்து வைக்கவில்லை என்பதால் கட்டாயத்தின் பேரில் என்னை திருமணம் செய்து வைத்ததாக கூறி என்னுடன் வாழ மறுத்துவிட்டார். 2006 முதல் 2016 வரை என் மனைவி என்னுடன் வாழவே இல்லை என்று எதாவது வழக்கறிஞர் அறிவிப்பாவது அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. மனுதாரரின் பெற்றோருக்கு ஒரு கடிதமாவது எழுதினேனா என்றால் இல்லை. என்னுடைய மனைவியை நான் பத்து ஆண்டு காலம் நோய்வாய்பட்ட என் தாயாருக்கு பணிவிடை செய்யவைத்திருந்தேன் என்றால் சரியல்ல, என் அம்மாதான் அனைத்து வேலைகளையும் செய்வார். போஜீனி என்பவரின் கணவர் சிலோனில் உள்ளாரா அல்லது இங்கிலாந்தில் உள்ளாரா என்றால்

அது எனக்கு தெரியாது . போஜீனியின் வீடு எனக்கு எதிர்வீடு என்றால் சரிதான். நான் தற்போது இருக்கும் வீடு என்னுடைய மூதாதையர் சொத்து என்பதால் நான் பிறந்ததில் இருந்து அங்கேதான் இருக்கின்றேன் என்றால்சரிதான். போஜீனியும் கடந்த 30 ஆண்டுகளாக எதிர் வீட்டில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். போஜீனியுடன் நான் இனி எந்த உறவும் வைத்துக்கொள்ளமாட்டேன் என்று காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தேனா என்றால் நினைவில்லை. திருமணத்திற்கு முன்பே போஜீனியுடன் நான் தொடர்பில் இருந்ததால் தான் மனுதாரை நான் புறக்கணித்தேன் என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் இன்றைய தேதி வரை நான் சொத்து மற்றும் வருமானம் சம்மந்தமான விவரங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை நான் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) கனேஷ்பாபு

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.24 14:41:30 +0530